# அந்நியமாதல் பற்றிய பிரச்சனை - ஓர் ஆய்வு

கே. சிவானந்தமூர்த்தி

இக்கட்டுரையின் நோக்கம் வேறுபட்டதும் குறிப்பிடத்தக்கதுமான மெய்யியற் புலங்களிலும், ஏனைய அறிவுசார் புலங்களிலும் 'அந்நியமாதல்' என்கிற எண்ணக்கரு பிரயோகத்திலும் நடைமுறையிலும் எவ்வாறாயிருந்ததென்பதனை நோக்குதலாகும். வரலாற்றில் மெய்யிலாளர்கள் இதனைச் சொல்லின் பொருள் பற்றியதோர் பிரச்சனையாகவும் நேர்வாகவும் (Fact) இனங்கண்டனர் காலங்காலமாக அந்நியமாதல் என்கிற எண்ணக்கருவினை பலதரப்பட்டதும் வேறுபட்டதுமான வியூகங்களில் மெய்யிலாளர்கள் எடுத்துக்கொண்டு ஒப்பிட்டும் தனியாகவும் ஆய்வு செய்தனர்.

தமிழ்மொழியில் அந்நியமாதல் என்ற கருத்தாக்கம் நீண்டகாலமாகப் பிரயோகத்திலிருந்து வருகிறது. அந்நியமாதல் என்கிற பதத்திற்கு ஒத்த கருத்துச் சொல்லாக 'பராதீனப்படல்' என்கிற பதப்பிரயோகம் இருந்துவருகிறது. அந்நியமாதல் என்பது ஒருவரை உறவுகளிலிருந்து, பொருட்களிலிருந்து, மரபுவழிப்பட்ட வாழ்விலிருந்து உலகம் விடுபட்டுச் செல்லுகிறதோர் நிலைப்பாட்டினைக் குறிப்பதாய் அழுத்தப்படுகிறது இதுவோர் செயலாகவும் செயலின் விளைவாகவும் கருதப்படுகிறது அந்நியமாதல் என்பது உருவாக்கப்படும் ஒன்றல்ல, உள்ளார்ந்த உணர்வாகவிருந்து அகப்புறத் தூண்டல்களின் பேறாக பிரவாகமாகிறது என்ற கருத்தும் நிலவுகிறது எனினும் அந்நியமாதல் என்கிற எண்ணக்கரு ஓர் எதிர்க்கணிய விளைவைச் சுட்டுவதாகவே காணப்பெறுகிறது தன்னை அலைக்கழிக்கும் உலக வாழ்வில் தன்னிலையை, தன்னாளுமையை உறுதிசெய்யமுடியாதபோது தோற்றம் பெறுகிறதோர் உணர்வுநிலையே அந்நியமாதல் என்கிற முடிவுநிலைக்குக் கொண்டுசெல்கிற உந்து எனக் கருதப்படுகிறது. அந்நியமாதல் ஒருவித சுய இழப்பு நிலையேயாம்.

சமகாலத்தில் இவ்வெண்ணக்கரு முதன்மை பெற்றதொன்றாக பிரச்சனைக்குரியதொன்றாகக் காணப்படுகிறது மெய்யியலாளர்கள் உளவியலாளர்கள் சமயவியலாளர்கள் பொருளியளாளர்கள் சட்டவியலாளர்கள் சமூகவியலாளர்கள் மற்றும் பலதரப்பட்ட கைத்தொழில் சமூகங்கள் பயன்படுத்துகிறதோர் எண்ணக்கருவாக அமைகிறது. பூகோளரீதியான கைத்தொழில் விஞ்ஞான வளர்ச்சிகள் மனித விழுமியங்களை மிகையான பெறுமதிக்குட்படுத்தி மனிதனைத் தான் வாழுகின்ற சமூகத்திலிருந்து தனிமைப்படவைக்கும் நிலைக்கு உள்ளாக்கிவிட்டதனால் அந்நியமாதல் உணர்வு நவீன சமூகத்தில் மிகவும் விரைவாகப் பரவுகிறதோர் நோய், இதனைக் கட்டுப்படுத்தவதற்கான மருந்து (தீர்வு) இல்லை என்கிறார் யக்கூஸ் இலூஸ்)

அந்நியமாதல் குறித்த பாரம்பரிய கருத்திற்கெதிராக ஜோன் டியூயி அந்நியமாதல் என்பதோர் நடைமுறைச் செயலுருவே தவிர அதுவோர் பௌதீகவதீத சிந்தனையைக் கொண்டதல்ல என்கிறார். 2. இந்தவகையில் அந்நியமாதல் குறித்த ஆய்வுகள் இன்றைய காலகட்டத்தில் அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் அபிவிருத்தியடைந்து வருகிற நாடுகளிலும் பொதுவாகப் பெருகி வருகிற தொழிநுட்பக் கலாச்சார வளர்ச்சியின் ஆழத்தை நிலைப்பாடுகளை முதன்மைப்படுத்தி ஆராயப்படுகிறது.

அந்நியமாதல் (Alienation) பெயர்ச் சொல்லாகவும் (Noun) பெயரிடைச் சொல்லாகவும் (Adjective) பிரயோகிக்கப்படுகிறது. பெயரிடைச் சொல்லாக வருகிற போது ஒருவனுக்குச் சொந்தமானதல்ல (Not ones own) அந்நியமானதொன்றென்றும் பெயர்ச் சொல்லாக வருகிறபோது அந்நியமான (Aline) பரீட்சயமில்லாத (Strangrer) என்றவாறாகவும் பெயர்கொள்ளும். மேலும் அதிகாரமல்லாத (powerlessness) மனஸ்தாபப்படு (Esteangement) விதியின்மை (Normlseeeness) என்ற கருத்தாக்கங்களை இச்சொல் வெளிப்படுத்தி நிற்கும். 3 சட்டத்துறையில் அந்நியமாதல் ஒருவரிடமிருந்து பிறிதொருவருக்கு

சொத்துப் பாராதீனப்படுத்தலைக் குறிக்கும். 4 அந்நியமாதல் என்பதற்கு ஒக்ஸ்போட் அகராதி எதிர்க்கணியப் பொருளினையே தருகிறது அவை முறையே இயல்பான நிலையிலிருந்து மாறுதல், சொத்துரிமையை ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு மாற்றுதல், சாதாரண மனநிலையிலிருந்து விலகுதல் என்பனவாகும்.5

அரிஸ்டோட்டில் முதலாய், இடைக்கால மெய்யியலாளர்கள் வரையில் பௌதிக வஸ்து அழுத்தத்தின் அடிப்படையிலேயே அந்நியமாதலை விளக்க முற்பட்டனர். இத்தகையதோர் பாங்கே இந்திய மெய்யியல், இறையியல் போக்குக்களிலும் காணப்பெறுகிறது. இந்திய இறையியலின் பிரகாரம் பொருள்வழி வரும் மகிழ்வும் புலன்வழி வரும் இன்பமும் சாசுவதமற்றவை. மேலும் மேலும் துன்பத்துக் குள்ளாக்குவன இந்நிலையை உணர்ந்து இவற்றிலிருந்து நீங்கிப் போகிற நிலையைக் குறிப்பதுவே அந்நியமாதல் காணப்படுகிறது. வேத உபநிடதங்களின் பிழிசாறாகக் காணப்பெறுகிற பன்னிரு திருமுறைகளில் வரும் பாடல்களிலும், மெய்கண்ட சாஸ்திரங்களில் வரும் சூத்திரங்களிலும் உலகிலிருந்தும் உலகியலிலிருந்தும் மனிதன் அந்நியப்பட்டுப் போக வேண்டிதன் அவசியத்தை வற்புறுத்தும் கருத்தாக்கங்கள் காணப்பெறுகின்றன.6 இறையியலில் அந்நியமாதல் என்கிற பதம் பிரயோகிக்கப்படுகிற போது உலகியல் வாழ்வினைகாட்டிலும் ஓர் உன்னத வாழ்வின் அவசியத்தை உறுதிப்படுத்துகிற நோக்கத்தினை உட்கிடையாகக் கொண்டே காணப்படுகிறது. உறுதிப்படுத்துகிற நோக்கத்தினை உட்கிடையாகக் கொள்கின்றது. இவ்வாழ்க்கை துன்பம் நிறைந்ததென்கிற போது மனிதன் உயிர்துறக்க வேண்டுமென வற்புறுத்தப்பட-வில்லை. படிமுறை வளர்ச்சிக் கிரமத்தில் கட்டு, பந்தம், பாசம், மலம் என்பனவற்றைத் துறந்து பரலோக வாழ்விற்கு மனிதன் தன்னைத் தயார்படுத்த வேண்டிய செயல் முறையை அந்நியமாதல் குறிக்கின்றது.

வைஷ்ணவ திவ்யப் பிரபந்தங்களும் உலகியல் வாழ்விலிருந்து அந்நியப்பட்டு பேரானந்தப் பெருவாழ்வொன்றினைப் பெற வேண்டும் என்கிற அடிப்படையில் செயல்வடிவொன்றினைக் குறிப்பதாய் அமைகிறது. (7) தமிழில் எழுந்த அறநூல்களும் குறிப்பாக திருக்குறளும் செயலுரு (Action) வடிவமாகவே அந்நியமாதலைக் காண்கின்றன.

கிறிஸ்தவ இலக்கியங்களும் அரிஸ்டோட்டில் அக்குவைனஸ் போன்றவர்களது மெய்யியலும் மானிடப் பிரச்சினைகளுக்குத் தீர்வாகவும் அந்நியமாதல் என்கிற உணர்விலிருந்து மனிதனுக்கு விடுதலையளிக்கக் கூடியதொன்றாகவும் சமயவழிப்பட்ட வாழ்க்கை முறையினை வலியுறுத்தினர். (Mandasic) இலக்கியங்களிலும் Hellenes கலாச்சாரத்துடன் பின்னியிருந்த Manchaic இலக்கியங்களிலும் குறிப்பிடப்பட்டிருந்த மறைபொருள் உண்மையை விளக்கவே அந்நியமாதல் என்கிற பதத்தினைப் பிரயோகித்தனர் மேலும் கிறிஸ்தவ இறையியலாளர்களான பிளட்டினஸ் (9) அகஸ்டீன் அக்குவானஸ், மெஸ்ரா எக்கார்ட் அந்நியமாதல் என்கிற பதத்தினை இறையியல் கருத்துக்களை விளக்கும் உடன்பாட்டு ரீதியில் பயன்படுத்துகின்றனர்.

உலகியலில் பிரத்தியட்சப்படும் உயிரினை 'அந்நியமானதோர் உயிர் வெளிச்சம் என கிறிஸ்தவம் கருதுகிறது, இவ் வெளிச்சம் அல்லது உயிர் தனக்குரியதல்லாததோர் உலகில் புகுந்து அதனூடாக பிரயாணம் செய்கிறது. எனினும் மண்ணுலகிற்கப்பாற்பட்ட விண்ணுலகம் குறித்து இச்சை கொண்ட இவ் உயிர் இவ்வுலகவாழ்வினைக் காட்டிலும் அவ்வுலக வாழ்வு ஒளி கூடியதொன்றெனக் காண்கிறது இவ்வகைத்தான சிந்தனையின் பிரிணாமமே உலகிலிருந்து உயிரினை அந்நியமாதல் நிலைக்கு உடன்படுத்துகிறது தான் படைக்கப்பட்ட உலகில் இருந்து உயிர் அந்நியப்படுகிறது எனவே வாழும் நிஜ உலகிலிருந்து உயிர் அந்நியப்படுத்தலே அந்நியமாதலாகும்.

உயிர் என்கிற வெளிச்சம் உலகிலிருந்து அந்நியப்படுகின்ற உணர்வினைப் பெறுகிறபோது இறைவன் தன் மக்கள் மீதாய் அன்பு கூர்ந்து தன் ஒரேயொரு பேறான மகனை அனுப்பி அவர் மூலம் தன் மக்களை மீட்கிறார் என விவிலிய வேதம் குறிப்பிடுகிறது (யோவான் 3. 16) இதுவே அந்நியமாதல் குறித்த கிறிஸ்தமத நிலைப்பாடாகும் யேசுகிறிஸ்துவின் மீது நம்பிக்கை கொள்வதனால் உலகப் பொருள் மீதிருந்த ஆசையிலிருந்து மனிதன் அந்நியப்படுகின்றான் அந்நியப்படுகிற போது இறைவனோடு ஒன்றித்த வாழ்விற்கு மீண்டும் திரும்புகிறான் உலகியல் பற்றுக்களிலிருந்து விடுபடுதல் என்கிற நிலையினை சுட்டவே அந்நியமாதல் என்கிற சொற்பிரயோகம் பயன்படுத்தப்படுகிறது என்பதற்கு மேலும் விவிலிய வேதமும் அகஸ்ரீனது பக்திப் பாடல்களும் சான்றாகின்றன.

2.0 அந்நியமாதலுக்கான காரணங்களை விளக்க முற்பட்ட கோட்பாடுகளுள் ஐந்து குறிப்பிடத்தகுந்தன பொருளியல் அடிப்படையில் மனித சாரம்சத்தை முதன்மைப்படுத்தியவாறாய் மார்க்சும் வழிவருவோரும் உளவியற் காரணங்களை முதன்மைப்படுத்தியவாறாய் பிராயிட்டும் பின்வருவோரும் சமூகவியற் காரணங்களை முதன்மைப்படுயவாறாய் டுர்க்கியமும் றைஸ்மென்னும் Durkheim and Riesmen முதன்மைப் படுத்தியவாறாய் ஜய்க்கூஸ் இலூலும் (Jacques Ellul ) மனிதன் தன் சாராம்சத்தை இழப்பதனால் என் சோரன் கீர்த்தக்காட்டும் பிற்பட்ட இருப்பியல் வாதிகளும் கோட்பாடுகளை வகுத்துள்ளனர்.

2.1 அந்நியமாதல் குறித்த உளவியல் நோக்கு நினைவு, நினைவிலி மனங்களுக்கிடையிலான (split) வெடிப்பு நிலையையொட்டியதாய் அமைகிறது நனவு நனவலி மனங்களுக் கிடையிலான வெடிப்பு நிலைகள் மனித ஆளுமையில் தாக்கங்களை ஏற்படுத்தி அந்நியமாதலிற்கு நிலைக்கு வழிசமைக்கிறது இந்நிலையில் வெளிப்படுத்துகிற உணர்வு சிநேகிதமற்ற தொன்றாக அமைந்து அவன் சார்ந்த சமூகத்திலும் கலாச்சாரத்திலுமாய் வெளிப்படுத்தப்படும் இத்தகைய நிலைகளைப் பாதுகாப்பு பொறிமுறை வழியாக (Defence Machanism) சரிசெய்து கொள்ளலாம் எனபிராயிட் போன்ற உளவியலாளர்கள் நம்பினர். உளவியலின் பிற்கால வளர்ச்சி நிலையில் எரிக்போம் போன்றோர் (Erice Fromn ) நவீன கலாச்சாரம் மனிதனது ஆக்கத்திறனை (Creative Power) அதன் இயல்பினை வெளிக்கொணரத் தவறியதால் அந்நியமாதல் உணர்வு தோற்றம் பெறுகிறதென்றனர்.

2.2 சமூகவியலாளர்கள் நோக்கில் அந்நியமாதல் ஏற்படுத்துவதற்கு சமூக ஒழுங்குகளே முக்கியமான காரணிகளாக அமைகின்றன. குறிப்பாக கலாச்சாரம் (Culture) சமூக அமைப்பு (Social Structure) தனியாள் ஆளுமை (The Personality of the individual) போன்றனவே அந்நியமாதல் உணர்விற்குப் பின்புலமாய் அமைகின்றன. மேலும் மனிதப் படிநிலையினையும் (Human condition) ஓர் சக்திவாய்ந்த பின்புலமானக குறிப்பிடலாம் எனினும் இதனைக்கலாச்சாரம் என்கிற பின்புலத்துள் உள்வாங்கி விடலாம். மனிதப்படிநிலை என்பது கூடுதலாக பௌதீகஅதீத சிந்தனைகளுடன் தொடர்புடையதாய் அமையும் (13) சமூகவியல் காரணிகளைப் பொறுத்தவரையில் வரலாற்று நோக்கில் குறிப்பாக, மனிதன் பாரம்பரிய வழிநடாத்துதலின் அடிப்படையிலேயே செல்லுகிற பாங்கே இறுதியில் அவனை அந்நியமாதல் நிலைக்குட்படுத்திவிடும். (14) இத்தகைய பாரம்பரிய வழிகாட்டல் அகம் நோக்கியவாறான வழிகாட்டல் புறம் நோக்கியவாறான வழிகாட்டல் என்கின்ற முறையில் செயல்ப்படும். கலாச்சாரம் சமூக அமைப்பு என்கிற பின்புலங்களால் கட்டுண்ட மனிதன் யதார்த்த நிலைகளைச் சந்திக்க தயக்கம் காட்டுவதன் வழியாக அவனது ஆளுமை பிறழ்வுக்குரியதொன்றாகி அந்நியமாதல் உணர்வுக்குட்படுகின்றான்.

2.3 திட்டமிடப்படாதா வகையில் வளர்ச்சி பெற்ற தொழிநுட்பம் அந்நியமாதலுக்குக் காரணமாகிறது தொழிநுட்பமும் அதன் பிரதியீடுகளும் மனிதனிடம் அறிதல் எவ்வாறு (Know How) ஏன் அறிதல் (Know why) என்கிற வினாக்களை எழுப்பி இறுதியில் அவனிடம் ஒருவிதபபட்ட இறுக்கத் தன்மையுடனும் முகாந்திர-மானதுமான நிலைப்பாடுகளைத் தோற்றுவித்துவிடும் இத்தகைய பாங்குகளால் பாதிக்கப்பட்ட மனிதனது மனநிலை, தான் ஈடுபடும் ஒவ்வொரு செயலிலும் ஒருவகை ஒழுக்கநிலைப்பட்ட முத்திரையைப் பொறித்துவிடும் இந்நிலை மனிதாயத்தைச் சாகடித்து அந்நியப்பட்டுப் போகிறதோர் மனப்பான்மைக்கு வழிவகுக்கும் (15) ஒரு நாடு தொழில் நுட்பங்களில் அதீத முன்னேற்றமடைகிற போது உண்மையில் அது தனது பிரச்சனைகளை மிகவுமாய் அந்நியப்படுத்தி விடுகிறது. (16) அதீத தொழிநுட்ப வளர்ச்சியென்பது உயர்ந்த நிபுணத்துவத்தையும் உயர்ந்த தனித்தனிப் பிரிவுகளையும் குறிப்பதாய் அமையும் தொழிநுட்ப வளர்ச்சி சந்தர்ப்பவசத்தால் அந்நியமாதலை உருவாக்குவதில்லை. அவை கட்டாய தேவையின் அடிப்படையிலேயே உருவாக்குகின்றன. இயற்கை ஒழுங்குகளுக்கு மேலாய் ஒருவித

யந்திரவயப்பட்ட ஒழுங்கினை நிலைநாட்டவே தொழில்நுட்ப வளர்ச்சிகள் உதவுகின்றன. இந்நிலை இயல்பான, இயற்கையான சூழலினைப் பின்தள்ளி சேர்கையான தொழில்நுட்பத்தால் உருவாக்கப்பட்ட சூழலினை உருவாக்கி விடுகின்றன. இவ்வாறாய் தொழில்நுட்பத்தால் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் வெறுப்பினை ஏற்படுத்தி மனிதனை தனது சொந்த சாராம்சத்திலிருந்து அந்நியப்படுத்தி விடுகிறது. யந்திரத் தேர்ச்சியின் சிறப்பு நிலைகளும், புறப்பொருளினை முதன்மைப்படுத்திய போக்கும் ஒன்றித்ததொரு நிலையிலிருந்தே அந்நியமாதல் தோற்றம் பெறுகிறதென்பதே யாக்கூஸ் இலூல் (Jacques Eulul) போன்றோரது நிலைப்பாடாகும்.

2.4 இருப்பியல் மெய்யியலாளர்கள் அந்நியமாதல் நிரந்தரமானதும் அமைப்பு வகைப்பட்ட தொன்றாகவும் மனித இருப்புடனாய் இருக்கிறதென்கின்றனர். மனிதன் உலகில் இருப்பினையும் தனது உள்ளார்ந்த இருப்பினையும் உணரும் போதே அவன் தன்னிருப்பினை உணர்கிறான் என்கிற கருத்தோட்டத்துடன் இருப்பியல் வாதத்தை ஆரம்பித்து வைக்கும் சோரன் கீர்க்ககாட், கைடேகர், ஜுன்போல்சாத்திரே போன்றோல் அந்நியமால் குறித்தும் அக்கறைப்பட்டார்கள், அந்நியமாதல் குறித்த இவர்களது விளக்கம் இருப்பியல் வாதத்திற்கு ஏற்புடைத்தவாறாகவே அமைகிறது. உள்பொருளும் காலமும் (Beingg and time) என்கிற நூ..பில் கைடேகர் அந்நியமாதல் குறித்துக் குறிப்பிடுகிறார். இவரைப் பொறுத்த வரையில் மனிதன் எப்போதுமாய் உலகத்தில் இருக்கிறான் மனிதன் இருப்பியலில் இல்லாதபோது உலகமென ஒன்றோ அல்லது உலகத்துப் பொருட்களென எதுவுமே இருக்க முடியாது. எனினும் அவை இல்லாதவிடத்தும் மனிதன் இருப்பில் இருக்க முடியும் பொருட்களெல்லாம் உண்மையில் பண்டங்கள் (Stuff) ஆகும். அவை உபயோகிக்கப்படுத்துவதற்கென்றே இருப்பில் இருப்பவை. அவை இருப்பியல் மெய்மையற்றவை. இத்தகைய யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாத மனிதன் யந்திரவயப்பட்டு தன் தனித்துவத்தை உணராது சமூகம், தேசம், அடுத்த மனிதன் என்கிறவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்தும் தேவையற்ற விழுமியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் போக்குமே மனிதனை அந்நியமாதல் நிலைக்குத் தள்ளிவிடுகின்றதென்கின்ற கருத்தாக்கமே பொதுவாக அந்நியமாதல் குறித்து இருப்பியல் வாதிகளிடம் காணப்-பெறுகிறது. எனினும் இருப்பியல்வாதிகளிடையே 'அந்நியமாதல்' என்கிற முடிவுநிலையை அடையும் போக்குகளில் சிறிய சிந்தனை வேறுபாடுகள் காணப்படுவதும் உண்மையே.

3.0 மாக்ஸ் அந்நியமாதல் என்கிற எண்ணக்கருவினை வரலாற்றின் குறிப்பிட்ட கட்டமொன்றின் நடுவன் பிரச்சினையாகக் கருதுகிறார். மாக்சியம். இயற்கையையும் அதன் பொருளண்மைத் தன்மையையும் விஞ்ஞான முறையியலுக்கு உட்படுத்த ு அதனையோர் அறிவியற் கோட்பாடாக விளக்க முற்படுகிறது. சமூகத்தை மாற்றுவதன் வழியாக தீமையைக் களைவதே என்பணி என்றவாறாக தத்துவப் போக்கினை முன்வைக்கும் மாக்ஸ் உலகினையோர் இலங்கியல் அடிப்படையில் காண்கிறார்.

மாக்சின் முதன்மைபெற்ற இளமைக்கால எழுத்தாக்கங்கள் 'அந்நியமாதல்' என்கிற கருத்தாக்கத்தினைப் பிரதிபலிப்பன அந்நியமாதல் அதன் இயல்பு அமைப்பு அதற்கான சமூகக் காரணிகள் மனித வரலாற்றில் அதனது தனித்துவம் குறித்து பிரஸ்தாபித்திருந்தன. நவீன சமுதாயத்தில் அந்நியமாதல் ஒர் கெடுதியென முந்திய எழுத்துக்களில் குறிப்பிட்டிருந்த மாக்ஸ் பாரிசில் வெளியிட்ட விஞ்ஞாபனத்தில் தொழிலாளர்கள் உழைப்பிலிருந்து அந்நியப்படுதலே சகல சமூகக் கேடுகளுக்கும் அடிப்படையாகிறதென்கிறார். (18) அந்நியாமாதல் என்கிற கெடுதிக்கு ஆண்களும் பெண்களும் இரையாகின்றனர். மாக்சினது 1844 க்கு பிற்பட்ட எழுத்துக்களில் அந்நியமாதல் அதிக முதன்மை பெறாதபோதும் இச் சொல்லாக்கம் தொடர்ந்து மாக்சினால் பிரயோகிக்கப்பட்டது. இச் சொற்பிரயோகம் பின்னைய எழுத்துக்களில் அருகிக் காணப்பெற்றிருந்தாலும் அந்நியமாதல் என்கிற எண்ணக்கரு மாக்சிச சிந்தனையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தினை ஏற்படுத்திய தென்பதனை மறுப்பதற்கில்லை. பிற்கால மாக்சின் சிந்தனையில் அந்நியமாதல் வலிதானதும் குணாம்சங்களை குறிப்பதுமோர் பிரச்சனையாக இனம்காணப்பட்டது.

முதலாளித்துவ சமூகவமைப்பில் 'நவீன உழைப்பாளி' அந்நியமாதல் உணர்விற்கு உந்தப்படுகிறதோர் பிரகிருதியாக-வேயிருப்பான் என மாக்ஸ் கருதினார் மனித சாரம்சம், மனித உழைப்பு, மனித உழைப்புக்குறித்த நிபந்தனைகள் சரிவர இனம்காணப் பெறுகிறபோதே அந்நியமாதல் என்கிற பிரச்சினை முடிவுக்கு வரும் என்பதே மாக்சின் நம்பிக்கை

மாக்சின் 1843 - 1844 காலப் பகுதிக்குட்பட்ட கட்டுரைகளில் விஞ்ஞாபனங்களில் Etfremdung என்கிற பதத்தினை அந்நியமாதலுக்காக உபயோகிக்கிறார் (19) இதற்கு ஆங்கிலத்தில் ஒத்தசொற் பிரயோகமாக Alienation அமைகிறது தமிழில் அந்நியமாதல் என அமைகிறது பல்வேறுபட்ட விடங்களில் விடய-தானங்களில் அந்நியமாதல் என்கிற சொற் அர்த்தத்தை மையப்படுத் தியவாறாகவே உபயோகிக்கிறார். அதாவது இயல்பான ஒன்றினில் விந்தியாச மானதொரு மனப்பான்மையை ஏற்படுத்திக் கொள்வதையே அந்நியமாதல் குறிக்கிறது தொழிற்பாடுபாடே மனிதனை அந்நியப்படுத்தி, மனிதர்களிடையே இறுக்கமான வகுப்புக்களை உருவாக்குகிறது.

கெகலோ அன்றி மாக்ஸோ அந்நியமாதல் என்கிற கருத்தாக்கத்தினைக் கண்டுபிடிக்கவில்லை. வரலாற்றுக்தேடல் ஜுன்யாக் ருஸொவினை (Jeen Jack Rousseau) இதன் கர்த்தாவாக கண்டுகொள்ளுது மனித இனம் தனது கலாச்சாரத்திலிருந்து தன் சாராம்சத்திலிருந்தும், பின்நோக்கி எதிர்கணியமாய் போகிற நிலையினைக் கண்டு ருஸோ, அந்நிலை அந்நியப்பட்டதொரு நிலையெனச் சுட்டிக்காட்டியதுடன் இயல்பான கலாச்சாரத்திலிருந்தும், சாரம்சத்திலிருந்தும் மனிதன் அந்நியப்படாது நேர்க்கணியமாய் செல்லுங்கள் என மனிதகுலத்துக்கு முன்வைத்த விண்ணப்பத்திலேயே இச் சொல்லாட்சியினைப் பயன்படுத்தி பொருள் பொழிந்ததொன்றாக்கினார்.[20] கெலினைப் பொறுத்தவரையில் அந்நியமாதலையோர் உண்மையில் எண்ணக்கருவாக (Ontological concept), வெறுமனவே அதுவோர் வளர்ச்சியடையும் பராதீனநிலையெனக் கண்டுகொண்டார்.[21] ருஸோவினதோ அல்லது கெகலினது காலத்திலோ முதன்மைபெற்றிராத சடவயப்பட்ட உலக நோக்கு மாக்ஸினால் முதன்மைப் படுத்தப்பட்டு அந்நியமாதல் குறித்த பார்வை உலகியல் சார்ந்த பொருளுண்மை அடிப்படையில் இடம்பெற்றது.

3.1 மாக்ஸ் அன்னியமாதல் குறித்து லூட்விக் அன்ரூஸ் வெயர்பாக் (Ludwig Andres Feurbach) (1804-74) கொண்டிருந்த கருத்துடன் ஈடுபாடுடையவராகக் காணப்பெற்றார். லூட்விக் அன்ரூஸ் வெயர்பாக்கினைப் பொறுத்தவரையில் கெகல் அந்நியமாதல் என்கிற கருத்தாக்கத்தினையோர் உண்மையியல் எண்ணக்கருவாகக் கண்டதைப் போலன்றி, இவர் இதனை மனித இருப்புக் குறித்த எண்ணக்கருவாகவும் அவ்வேளை சமயசார்பற்ற புறப்பொருள் வயத்ததொன்றாகவும் நோக்குகிறார். இக்கருத்து மார்க்ஸிற்கு உவந்ததாக அமைந்ததென்பதில் விபப்பில்லை. மாக்சின் பிரகாரம், மனிதன் தன்னிலும் உயர்ந்தவொரு உள்பொருள் ஒன்று உண்டு என உற்பத்தி செய்து கொண்டு தன்னை அதனிடம் பராதீனப்படுத்துகிறபோது, மனிதன் தன்னை தன்னிலிருந்து அந்நியப்படுத்துகிறான் என்கிறார். மேலும் கெகலினது மனிதனின் சுய உற்பத்தியே அந்நியமாதல் என்கிற மனிதனின் கருத்தாக்-கத்தினை மாக்சும் ஏற்றுக்கொண்டார். எனினும் கெகலினைப் போலல்லாது இதனை மாக்ஸ் புறவயப்பட்டதொன்றாகவே காண்கிறார். அவ்வாறே வெயர்பாக்கின் சமயம் குறித்த திறனாய்வுகளை ஏற்றுக்கொள்கிற மாக்ஸ், சமய அந்நியமாதலென்பது அந்நியமாதலின் ஒர வடிவம் என்கிறார்.

அந்நியமாதல் எத்தகைய அடிப்படை வடிவங்களில் விரவாகமாகின்றன என்பது குறித்தும் சமூக அரசியல் துறை அறிஞர்களிடையே வேறுபாடு காணப்படுகின்றது. ஏனெஸ்ட் சார்ச்ரெல் (Ernest Schachtel) நான்கு அடிப்படைகளில் வகையீடு செய்கிறார்.

I இயற்றையிலிருந்து அந்நியப்படல்.

II. தன்னோடானவர்களிலிருந்து அந்நியப்படல்

III.தனது பணித்திறனிலிருந்து அந்நியப்படல்
IV தன்னிலிருந்து அந்நியப்படல் [22]
அந்நியமாதனை லூயிஸ்வெரஸ் (Lewis Feceres) ஆறு அடிப்படைகளில் வகைப்படுத்துகின்றார். அவை முறையே

1 தரச் சமூகத்திலிருந்து (Class society)
2 போட்டிச் சமூகத்திலிருந்து (Competitive So ciety)
3 கைத்தொழில் சமூகத்திலிருந்து (Industrial Society)
4 பொதுச் சமூகத்திலிருந்து (Mass Society)
5 இனங்களிலிருந்து (Race)
6 சந்ததியிலிருந்து (Generation)

3.2 மாக்ஸ் அந்நியமாதலை நான்கு அடிப்படைகளில் வகைப்படுத்துகின்றார் முறையே.

I மனிதன் தனது உற்பத்திச் செயற்றிறனிலிருந்து அந்நியமாதல் (From the product of his activity)
II உற்பத்தியிலிருந்து அந்நியமாதல் (From the productive activity itself)
III மனித சாராம்சத்திலிருந்து அந்நியமாதல் (From his human essence)
IV மற்றைய மனிதரினிலிருந்து அந்நியமாதல் (From other men)

அந்நியமாதலுக்கான காரணம் எதுவாக இருந்தாலும், அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் பொதுவானவை. அந்நியமாதல் மனித சக்தி குறித்த மாக்சினது கருத்தாக்கம், ஏனைய துடிப்பான உணர்வு பூர்வமான ஆராய்சியாளர்களை இதில் அக்கறை காட்ட வழி செய்தது. முதலாளித்துவ போக்குடைய சமூகவியலாளர்களும், அந்நியமாதல் குறித்து வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருந்தாலும் மூலதனமே (Capital)அந்நிய மாதலுக்கு மூலகாரணி என்பதில் ஒருமித்த கருத்துடையோராய் காணப்பெறுகின்றனர். மேலும் மாக்சிச வாதிகள் அந்நியமாதலையோர் நியம எண்ணக்கருவாக (Nrmative concept) ஏற்றுக் கொள்கையில், அமெரிக்க அனுபவவாதிகள் சமூக உளவியல் பாக்கானதொன்றாக ஏற்றுக் கொள்கின்னர். உழைப்புச் செயலினையே மனிதசாரம்சம் எனக் கருதும்மாக்ஸ் அதனை அவன் இழப்பதையே அந்நியமாதலுக்கான அடிப்படையெனக் கருதுகிறார். மாக்ஸினைப் பொறுத்தவரை மனிதன் தனது ஆற்றல்களை இயற்கையினுள் செலுத்தி புறப்பொருளாக்கம் செய்வதே உழைப்புத் தொழில். இத்தகைய உழைப்புச் செயலே மனிதனை இயற்கையுடனும் சமூகத்துடனும் தொடர்புபடுத்துமொன்றாக அமைகிறது.

உழைப்பாளிக்கும், உழைப்புச் செயலுக்குமான உறவு, முதலாளித்துவ சமுதாயததில் உற்பத்தி செயல் உழைப்புச் செயல் என்கிற மானிட ஆற்றலை வளர்ப்பதற்கான சாதனமாக இருப்பதில்லை. மாறாக அவற்றின் பயன்பாட்டினையே பெருமளவு குறிப்பதாயுமுள்ளது. உழைப்பு பிரிவினையுள் ஏற்படும் வளர்ச்சி ஒரே மாதிரியான உழைப்புச் செயலினைச் செய்யக்கூடியதாக்கி வருகிறது. இதனால் உழைப்பும் வேதனையாகி விடுகிறது. இவ்வித உழைப்பு தொழிலாளிக்குச் சொந்தமற்றதாகி சுரண்டுபவர்களின் இன்பத்துக்கும் சுரண்டப்படுபவர்களின் துன்பத்திற்கும் காரணமாகி விடுகிறது. இவ்வாறாக மனிதன் தன் உழைப்பிலிருந் அந்நியப்படுத்தகிறான்.

முதலாளித்துவத்தில் உழைப்பாளிக்கும் உற்பத்தி பொருட்களுக்குமிடையிலான உறவு, உழைப்பு செயலிலிருந்து உழைப்பாளி அந்நியமாதல் போன்றே, உற்பத்திப் பொளினின்றும் அந்நிய மாகிறான். பொருள் என்பது திரட்டப்பட்ட உழைப்பாகும். உழைப்பாளி பொருள் மீதாய் சுதந்திரத்தினை ஏற்படுத்திக் கொள்வதற்குப் பதிலாக, அதன் அடிமையாகிறான். தன்னிடத்தான ஆற்றல்களை நிறைவு செய்து படைக்கும் செயல் தன்வயமாகாமல் அந்நியமாக இருப்பதுபோய், அதுவே அந்நியமாக்கி விடுகிறது. இந்நிலை தன்வயப் படுத்தப்படவேண்டிய உலகம் பிறர் வசம் ஆக்கிவிடுகிறது. படைப்பினை உழைப்பாளி அதிகமாக வழங்குகிற போது, அவனுக்குரிய நுகர்வும் குறைந்த வண்ணமாகிறது. தனது படைப்புக்களை நாடத்தானும் அவனுக்கு உரிமையில்

லாதுபோய், அவை முதலாளித்துவத்தின் கையகப்பட்டதாகி விடுகின்றன. இந் நிலையில் பொருட்கள் தன் படைப்புக்கள் என்பதனையுணரத் தவறுகிற உழைப்பாளி தனக்கு கிடைக்கிற அற்பமான கூலியினைப் பெற்றுக் கொண்டு, தன் உற்பத்தியிலிருந்து அந்நியப்படுகிறான்.

முதலாளித்துவ அமைப்பில் மனிதனுக்கும் அவனது சமூகத்திற்குமான உறவு நிலை அந்நியப்பட்டே காணப்பெறுகிறது. உழைப்பு மனிதனை அவனது உற்பத்திப் பொருளிலிருந்து பிரித்துவிடுவதன் காரணமாக, அவன் அவனது சமூக வாழ்விலிருந்து பிரிக்கப்படுகிறான். மேலும் முதலாளித்துவ அமைப்பில் உழைப்புச் செயலானது தனி மனிதனை மானிட ஜீவியாக காட்டும் பண்பைக் களைந்துவிடுகிறது. சமூக வாழ்வென்பது ஒருவன் மானிடத் தன்மைகளைக் கொண்டுள்ளானா, அல்லவா என்பதைச் சுட்டிக் காட்டும் இலக்கணமாகும். மேலும் மனிதன் சமூக வாழ்விலிருந்தே தோற்றம் பெற்றவன். அவன் பிறந்ததே கூட்டு வாழ்வின் பயனால் தான். தன் சமூகத்துடன் சேர்ந்து இயற்கையுடன் தொடர்பு கொள்வோரிலேயே தன் ஆற்றல்களை அவன் உணர்ந்து கொள்கிறான். இயற்கையின் இதரபுறப்பொருட்களை போல இதர மனிதர்கள் என்ற புறப்பொருட்களுமே இவனது ஆற்றல்கள் நிறைவு பெறுகின்ற இடங்களாகும். ஒருவன் தனிமனிதனாகச் செயல்பட்டாலும் சாரமாகவே சமூகத்தின் செயல்படுகிறான். இவ்விதம் செயல்படுவதால் மனிதன் சர்வவியாபகனாகவும் சுதந்திர ஜீவியாகவும் இருக்கிறான். எனினும் அந்நியமாக்கப்பட்ட உழைப்பானது மனிதர்களிடமிருந்து இயற்கையையும் பிறர் உடமையாக் கப்பட்ட புறப்பொருள் அவனையும் (இவனது செயல்கள்) அந்நியமாவதற்குக் காரணமாகி இனவாழ்விலிருந்தாய் இவனை அந்நியமாக்குகிறது. இந்நிலையில் மனிதன் மற்றைய மனிதர்களிடமிருந்து அந்நியப்படுகிறான். மார்க்ஸின் கருத்துப்படி முதலாளிததுவ அமைப்பில் மானிட பிரக்ஞையானது பெரும்பாலும் உயிர்பிழைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதிலேயே செயற்படுகின்றன, அக்கறை செலுத்துகின்றன. மனிதனை மனிதன் தின்னும் சமுதாயததில் இத்தகைய முனைப்பிருந்தால் தான் ஒருவன் ஓரளவேனும் தாக்குதலைச் சமாளிக்க முடியும் என்பது மாக்ஸின் கருத்து அந்நியமாக்கப்பட்ட உழைப்பு மானிட உறவுகளில் மிகக் கடுமையான தாக்கத்தினை விளைவிக்கிறது. அவன் தன்னினத்திலிருந்தும், ஏனைய மனிதரிடமிருந்தும் அந்நியப்படுகிறான். அந்நியமாக்கப்பட்ட உழைப்பு உறவுகளுக்குள்ளே தான் ஒவ்வொரு மனிதனும் தான் உழைப்பாளி என்ற வகையிலோ உழைப்பை சுரண்டுபவன் என்ற வகையிலோ இரண்டுக்கும் இடையில் உள்ளவன் என்ற வகையிலோ தனது தகுதிக்கும் உறவுக்கும் ஏற்றவாறாகவோ மற்றவனைப் பார்க்கிறான். அந்நியமான நிலையில் ஒரு மனிதன் பிறிதொரு மனிதனுடன் கொள்ளும் உறவு உண்மை உறவாக இருப்பதில்லை. இதுவொரு உழைப்பாளி முதலாளியுடனும், வீட்டுப் பணியாள் வீட்டு எசமானிடமும், சுரண்டப்படுகிறவன், சுரண்டப்படுபவனிடம், கீழ் அதிகாரி மேல் அதிகாரியுடனும், வாடிக்கையாளர் வர்த்தகரிடமும், பிச்சைக்காரன் பிச்சை பெறுவனிடமும் கொள்ளும் உறவுபோன்றதாகும்.

3.3 மாக்சினது அந்நியமாதல் குறித்த ஆய்வு முற்போக்கானதாய் காணப்பெறினும், அதற்கென அவர் முன்வைத்த தீர்வு பெரிதும் பயனளிக்கவில்லையெனலாம். மாக்ஸ் இளமைக்காலத்தில் அந்நியமாதல் குறைந்து கொண்டிருந்த நிலைப்பாடு வளர்ச்சி நிலையில் மாறுபடுகிறது. இவ் மாறுபாட்டிற்கு, ''எண்ணக்கருக்கள்'' குறித்துக் காலத்துக்கு காலம் அவர் ஏற்படுதிதிக் கொண்ட சிரத்தை மாற்றங்களே அடிப்படையாகிறது. இளம் மாக்ஸ் இலட்சியவாத (Idealistic) சிந்தனைகளினாலும் ஒழுங்கு வயப்பட்ட (Moralistic) சிந்தனைகளினாலும் தாக்கமுற்றிருந்தார். வளர்ச்சி நிலையில் அவரிடம் ஏற்பட்ட சிந்தனை மாற்றங்கள் பொருளாதாரம், மூலதனம், உபரி வருமானம் என்கிற எண்ணக்கருக்களுக்கு முதலிடம் வழங்கியது. இதன் வழியாக அனைத்து உறவுகளையும் ஊழியத்தை வழங்குதல், வாங்குதல் என்கிற அடிப்பயைடிலே கண்டு கொண்டார். மாக்ஸின்காலம் வரை மனிதவாழ்வின் மையப்பிரச்சினையாக வைத்தெண்ணப்பட்ட

அந்நியமாதல், மனித தேவைகளுள் ஓர் அலகான பொருளாதாரத்தை மையப்படுத்தியவாறாய் பிற்கால மாக்சினால் நோக்கப்பட்டது. பிற்காலத்தில் றோபொட்கே மேரொன் ((Robert K Merton) போன்றோர் அந்நியமாதலையோர் சமூக உளவியல் நேர்வாக தீவிரமாக நோக்கத் தலைப்பட்டனர்.

அடம் சேவ் (Adam Schaff) என்கிற முதன்மை வாய்ந்த மாக்சியவாதி 1970 ல் எழுதிய (Human Individual) என்கிற நூலில் அந்நியமாதல் என்கிற பிரச்சினை இன்னும் தீர்ந்து விடவில்லையென்றும் பல்வேறு வடிவங்களில் அந்நியமாதல் காணப்படுகின்றதென்றும் குறிப்பிடுவது இங்கு நோக்க வேண்டியதாகிறது[23]

4.0 திட்டமிடப்படாத நிலையில் வளர்ந்து வரும் தொழில்நுட்ப வளர்ச்சிகள் அதனைத் தொடர்ந்து ஏற்படும் தனித்தனித் தொகுதியாக்கங்களும் (Compartmentalization)சமகால உலகில் அந்நியமாதல் பிரச்சினைகளுக்கு மேலும் தூபமிடுகின்றன என்பதும் சிந்திக்கத்-தக்கதொன்றாகும்.

சமய மெய்யியலாளர் அந்நிய-மாதலையோர், சுயதன்மையானதென அதாவது தனியாள் சம்பந்தப்பட்டதொன்றாகக் கருதுகிறார்கள். அந்நியமாதல் தனியாள் தனக்கென உரிய இயற்கையிலிருந்தும் தன் மூலமாயுள்ள முழுமையிலிருந்தும் அல்லது கடவுளிலிருந்தும் (கெகல் கருதுவதுபோல/ இருகெவர்ப்பட்ட வேறான நிலைகளில் அந்நியப்படலை அழுத்திக் குறிப்பிடுகின்றார்கள்.) சமய மெய்யியலாளர்கள் கண்டு காட்டிய வழியில் மேன் மேலும் ஆய்வுகள் இடம் பெறின் அந்நியமாதலைப் புரிந்துகொள்ள வாய்ப்புக்கள் ஏற்படும். மாக்ஸ் நியமப்படுத்தியவாறாய் அந்நியமாதலை நோக்கியது போலன்றி, மெய்யியல்சார், சமயம்சார், சமூகவியல்சார், சமூகஉளவியல்சார், பொருளாதாரம்சார், தொழில் நுட்பம்சார் எண்ணக்கருவாக நோக்குகையில் அந்நியமாதல் எனும் எண்ணக்கரு 01. மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையில் 02. மனிதனுக்கும் அவனது சிந்தனைக்கும் இடையில் 03.மனிதனுக்கு அவன் சார்ந்துள்ள சமூகத்திற்கும் இடையிலான தொடர்புகளை மையப்படுத்திய ஆய்வில் பெற்ப்பட்ட உறவு நிலையினைச் சுட்டுமோர் சொற்குறியாகக் கண்டுகொள்ளலாம்.

## அடிக்குறிப்பு

I S.P. Dubey, The Problem of Alienation and the Technological society, Indian Philosophical annual, Vol 13, University of Madras, P. 57.

II John Dewey, Reconstruction in Philosophy.
Beacon Press. 1963 P. 24.

III Paul Edward. The Encyclopedia of Philosophy. Vol 1- Newyork P.76

IV Ibid, Paul Edward P.72

V Ibid, Paul Edward P. 72

VI மாடுண்டு கண்டுண்டு மக்களுண்டு என மகிழ்வதெல்லாம் கேடுண்டு எனும்படி கேட்டுவிட்டேன்.
இனிக்கேற்மனமே......

(தேவாரம்-அப்பர்)

ஊன்கெட்டு உயிர் கெட்டு
உணர்வுகெட்டு, என் உள்ளமும்
போய் நான் கெட்டாவா பாடித்
தேள்ளேணம் கொட்டாமே.....

(திருவாசம் மாணிக்கவாசகர்)

விடப்படுமோ இப்பிரபஞ்ச வாழ்க்கை
விட்டு மனம் திடப்படுமோ நின்னருளின்றே
மாதா வுடல்சலித்தாள்! வல்வினையேன் கால்சலித்தேன்
வேதாவுந் கைசலித்து விட்டேனோ-நாதா
இருப்பையூர் வாழ்சிவனே! இன்னமோ என்னை
கருப்பையூர் வராமற்கா

(பட்டனத்தார் பாடல்)

VII நன்றாய் ஞானம் கடந்துபோய்
நல் இந்திரியம் எல்லாம் நீத்து
ஒன்றாய் கிடந்த அரும்பெரும் பாழ்
உவல்பில் அதனை உணர்ந்துணர்ந்து
சென்றாங் இன்பத் துன்பங்கள்
செற்றுக் களைந்து பசை அற்றால்
அன்றே அப்போதே வீடு
அதுவே வீடு வீடாமே.

(நம்மாழ்வார், திவ்வியப்பிரபந்தம்)

VIII தனககுவமை இல்லாதான்றாள் சேர்ந்தார்க்கல்லார்
மனக்கவலை மாற்றலரிது.

அறவாழி யந்தணற் றாள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவரி நீத்தலிரிது

(திருக்குறள்)

IX Pelix Ceyer, david Scheiszer. Alienation Problems of meaning theory and Mathod, Cambridge Print 1981 P 24.

X Ibid, Pelix ceyer, David Scheiszer. 1981 P 24.

XI "எம்மை நீர் உமக்கென்று உருவாக்கினீர்
எங்கள் இதயம் உம்மில் அமாந்திராவிடில்
என்றுமே அதற்கு இளைப்பாறுதல் இல்லை"

" பூமியிலே உங்களுக்கு பொக்கிஷங்களைச் சேர்த்து
வைக்கவேண்டாம். இங்கே பூச்சியும் துருவும் அழத்துவிடும். இங்கே திருடா
கன்னமிட்டுத் திருடுவர்."

(மத்தேயு 6:19)

XII Opcit, S P Duby, 1980 P.61

XIII Rajaganesan, The Social order alienation and Education. Indian Philosophical annual University of Maddras 1980. P. 72.

XIV Deisman. D The Colony crowd, Newharen 1950, P.29.

XV Opcit, S P. Duby 1980 p. 61

XVI H. Skolimowski, Technological Alienation Indian Philosophical annual Vol 13. University of Madras. 1980. P. 46.

XVII John Plamenatz, Karl Marx's Philosophy of man, Clarendon Press Oxford 1975 P 115

XIX Ibid, John Plamenatz 1975. P. 120

XX Opcit, H. Skolimowski, 1980. P. 48

XXI Opcit, S.P. Dubey, 1980. P. 59

XXII Ibid. S.P. Dubey 1980. P. 64

XXIII Opcit, H, Skolimowski, 1980.P. 49.